செ.வெ.எண்.02 நாள்.02.04.2017.

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில், தேசிய தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கும் முதற்கட்ட மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் போலியோ சொட்டு மருந்து வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை குழந்தைகள் நலப்பிரிவில், தேசிய தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கும் மருத்துவ முகாம் இன்று (02.04.2017) நடைபெற்றது. முதற்கட்ட மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

20 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து தீவிர போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 6 ஆண்டுகளாக குழந்தைகளுக்கு போலியோ தாக்கம் இல்லாமல் உள்ளது. தமிழகம் முழுவதும் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கும் முகாம் இன்று (02.04.2017) முதற் கட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக 30.04.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று தொடங்கி வைக்கப்படவுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 5 வயதிற்குட்பட்ட 2,83,541 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் 1708 போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்கள் மூலம் 2,88,530 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது. இப்பணிகளில் சுகாதாரத்துறை பணியாளர்கள், சத்துணவு பணியாளர்கள், ரோட்டரி மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சேர்த்து மொத்தம் 6,461 பணியாளர்கள் போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இன்று 02.04.2017 போலியோ சொட்டு மருந்து பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் 30.04.2017 அன்றும் தவறாமல், போலியோ சொட்டு மருந்து அளித்திட வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம்கள் அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் ஆகிய இடங்களிலும், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சுங்கச்சாவடிகள், பேருந்து நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்களிலும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இடம் பெயர்ந்து வாழும் கட்டடத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்காக 20 நடமாடும் மருத்துவக் குழுக்கள் மூலம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள், தாய்மார்கள் அனைவரும் தங்களுடைய 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை அருகில் உள்ள போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்களுக்கு அழைத்துச் சென்று குழந்தைகளுக்கு தவறாமல் போலியோ சொட்டு வழங்கிடுமாறும், போலியோ இல்லாத உலகம் படைப்பதற்கும், தேசிய பல்ஸ் போலியோ சொட்டு முகாம் சிறப்பாக செயல்படவும், மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு அளித்திட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டு கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் திரு.சு.சிவசுப்பிரமணியன், திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனை முதல்வர் மரு. சித்தி அத்தி முனவரா, சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர்கள் (திருநெல்வேலி) மரு.ராம்கணேஷ், (சங்கரன்கோவில்) மரு.செந்தில்குமார், மருத்துவக்கல்லூரி துணைச் செயலாளர் மரு.கண்ணன், மாநகராட்சி நகர்நல அலுவலர் திரு.பொற்செல்வன் உள்பட மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.